001/DD/20

T.C-019

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

2. வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

3. கையெழுத்துத் தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியை – தமிழாக்கம் செய்க. (1 × 10 = 10)

Food is essential for all living beings. Without food man cannot live long. Everyman has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and he will fall ill. So, everyman has to eat enough food to live.

This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business firm, industrials concerns and Government departments, lot of information processing is required. The computer is the superfast information processing unit.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. சிக்கனமும் சிறுசேமிப்பும்

3. நான் விரும்பும் கவிஞர்

4. மருத்துவ விடுப்பு முடிந்து பணியில் சேர துறை அலுவலருக்குத் கடிதம் எழுதுக. (1 × 10 = 10)

[Turn over

## பகுதி — II

5. கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (5 × 1 = 5)

அகழாய்வு என்பது இயந்திரங்களைக் கொண்டு மண்ணைத் தோண்டுவதன்று. அவ்வாறு செய்தால் தடயங்கள் சிதைந்து விடும். பல உண்மைகளையும் நாம் இழந்துவிடுவோம். ஆகவே, ஆய்வுக்குழுவினர் ஆய்விடத்திலுள்ள மண்ணை மிக நுட்பமாகவும், பொறுமையுடனும் சிறுகச் சிறுகத் தோண்டிச் சிதையாமல் தடயங்களைத் திரட்டுவர்; அகழாய்வு செய்யும்போது பூமியின் மேற்பரப்பிலிருந்து கீழாகக் குறிப்பிட்ட ஒரு பகுதியினைச் சில வழிமுறைகளைப் பின்பற்றி அகழ்ந்து ஆய்வு செய்வர். இவ்வாறு செய்யுங்கால் பல்வேறு காலத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருட்கள் வெவ்வேறு மண்ணடுக்குகளில் கிடைப்பதுண்டு. இவற்றின் அடிப்படையில்தான் ஒரு நாகரிகத்தின் கூறுகளை அறிந்து கொள்ள இயலும். ஓரிடத்தில் எப்போதிலிருந்து மக்கள் வாழத் தொடங்கினர், எத்தகைய பண்பாட்டினைக் கொண்டு விளங்கினர் என்பன போன்ற வினாக்களுக்கு அகழாய்வின் மூலம் உரிய விடைகளைக் கூற இயலும்

வினாக்கள் :

(அ) அகழாய்வு என்பது எதைக் கொண்டு தோண்டுவதன்று?

(ஆ) தடயங்களை எவ்வாறு திரட்டுவர்?

(இ) அகழாய்வு எவ்வாறு செய்வர்?

(ஈ) எவற்றின் அடிப்படையில்தான் ஒரு நாகரிகத்தின் கூறுகளை அறிந்து கொள்ள இயலும்?

(உ) எதன் மூலம் உரிய விடைகளைக் கூற இயலும்?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ப உரையாடலை நிறைவு செய்க. (5)

தொடர்வண்டி நிலையத்தில்

நபர் 1 : பேருந்து நிலையம் எங்கே இருக்கிறது?

நபர் 2 : ____________

நபர் 1 : சென்னை செல்லும் பேருந்து எங்கு நிற்கும்?

நபர் 2 : ____________

நபர் 1 : எத்தனை மணிக்கு ஒருமுறை பேருந்து இருக்கிறது?

நபர் 2 : ____________

நபர் 1 : விரைவுப் பேருந்து இருக்கிறதா?

நபர் 2 : ____________

நபர் 1 : சென்னைக்குப் பேருந்து கட்டணம் எவ்வளவு இருக்கும்?

நபர் 2 : ____________

## பகுதி — III

மொழிப் பயிற்சி (40 × 1 = 40)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

7. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

8. 67 - இந்த எண்ணை எழுத்தால் எழுது.

9. இனிமை - சொற்றொடரில் அமைத்து எழுதுக.

10. October - மாதத்தின் பெயரைத் தமிழில் எழுதுக.

11. புதன் கிழமைக்கு அடுத்த கிழமை எது?

12. புரட்டாசி - மாதத்திற்கு முந்தைய மாதம் எது?

13. விடுபட்ட எழுத்துகளை எழுதுக.

ச, சா, ______, ______, சு, சூ, ______, ______

உரிய விடையை எழுது

14. முகடு என்பதன் பொருள்

(அ) உயரம்

(ஆ) உச்சி

(இ) நீளம்

எதிர்ச்சொல் அறிக :

15. அருகில்

உரிய நிறுத்தற்குறி இடுக.

16. அடேயப்பா எவ்வளவு பெரிய ஏரி

17. இயல் இசை நாடகம் முத்தமிழாகும்

பிழையைத் திருத்தி எழுதுக :

18. நரி வந்தாள்.

19. பறவைகள் பாடியது.

விடைக்கேற்ற வினா எழுதுக.

20. மேடைப்பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.

21. இடைநிலை ஆசிரியர்ப் பயிற்சி ஈராண்டுகள் ஆகும்

வினைச்சொற்களை எடுத்தெழுதுக :

22. மயில் ஆடியது

23. இராமன் வந்தான்

ஒருமை, பன்மை பிழையை நீக்கி எழுதுக

24. அவர் கையில் கோப்புகள் இருந்தது

இரண்டாவது எழுத்தை நீக்கி புதிய சொல் ஒன்றை எழுதுக.

25. புதையல்

மயங்கொலிப் பிழையை நீக்கி எழுதுக.

26. பூமியை வளம் வறுவேன்.

27. மீண்பிடிக்க வளைவீசினான்

இருபொருள் தருக.

28. மெய்

மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.

29. பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும்.

எதிர்காலச் சொல்லை எடுத்தெழுதுக:

30. பார்த்தான், பார்ப்பான், பார்க்கிறான்.

பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுது.

31. இலாபம்

பால் வகையை எழுதுக :

32. மாடுகள்

திணை வகையை எழுதுக :

33. ஐவர்

34. Writs - கலைச்சொல்லைத் தமிழாக்கம் செய்க

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

35. மயில் மிகவும் அழகான ———————— (பரவை, பறவை)

36. நெகிழ என்பது ———————— என்னும் பொருளில் வந்துள்ளது (தளர, தலர)

37. M.E. - பட்டப்படிப்பை தமிழில் எழுதுக.

பொருத்துக :

38. விரை – உடல்

39. கழல் – பெருகி

40. ததும்பி – மணம்

41. மெய் – அணிகலன்

உரிய வேற்றுமை உருபை இணைத்தெழுதுக.

42. நான் மழையில் நனைவது பிடிக்கும்.

இளமைப்பெயரை எழுதுக.

43. மான்

பொருந்தாத சொல்லை எடுத்தெழுதுக.

44. ஆசிரியர், வேலன், தேவி, வந்தாள்.

பெயர்ச்சொல்லை எடுத்தெழுதுக.

45. உண்டான், தின்றான், பழம்.

உவமையை உருவகமாக மாற்றுக :

46. தேன்தமிழ்.